தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகம் - 2020
-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழக சட்டத்தின் 47(2) ஆம் உறுப்புரை மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைகழகத்தின் நிதிக்கூற்றுக்களினுள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,638,179 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 72,431,126 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 67,792,947 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ் முன்னேற்றத்திற்கு முன்னைய ஆண்டிற்கு இணையாக மீண்டெழும் அளிப்புக்கள் ரூபா 16,615,455 தொகையினால் அதிகரித்தமையும் மொத்த செயற்பாட்டுச் செலவீனம் குறைவடைந்தமையும் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 சனவரி 03 ஆம் திகதி நடைப்பெற்ற அமப/16/2673/720/030 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்காக பணிமனையொன்று, விடுதியொன்று மற்றும் உணவகச்சாலையொன்று கட்டுமானத்திற்காக ரூபா 927.34 மில்லியன் நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டுமானத்திற்காக வரவுசெலவினூடாக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 281.36 மில்லியன் ஒதுக்கீடு செய்து வழங்கியிருப்பினும் அதில் ஆலோசனைக் கட்டணமாக ரூபா 22.5 | கட்டுமான பணியின் மாற்றத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் 2021-2023 இடைக்கால வரவுசெலவு கட்டமைப்பினுள் ஏற்பாடு செய்யுமாறு முன்மொழியப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்டுள்ள பணம் உயர் வினைத்திறனுடன் மற்றும் பயனுறுதியுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் மட்டும் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) பல்கலைக்கழகத்தின் பீடக் கட்டிடம் பழுதுப்பார்த்தல் தொடர்பான ஒப்பந்தம் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 14,506,548 ஆன தொகைக்கு 2016 செப்தெம்பர் 10 ஆம் திகதி அளிக்கப்பட்டிருந்ததுடன் 60 நாட்களினுள் வேலை நிறைவடையும் என அறியப்படுத்தி 2019 செப்தெம்பர் 12 ஆம் திகதி முற்பணமாக ரூபா 2,901,285 செலுத்தப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதிவரையிலும் வேலை நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்விற்கு தெளிவுப்படுத்தவில்லை. | தற்போது எஞ்சிய வேலைகள் தொடர்புடைய ஒப்பந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த செயற்திட்டம் இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டு முடிவதற்குள் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் பல்நோக்கு ஸ்டுடியோ வளாகம் மற்றும் விரிவுரை அறைகள் வளாகத்துடனான கட்டிடமொன்று நிர்மானிப்பதற்கு 2011 ஏப்ரல் 27 ஆம் திகதிய அமப/11/2152/539/017-1 ஆம் இலக்க அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. திறைச்சேரியிடமிருந்து மற்றும் துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக மீளாய்வாண்டு இறுதி வரையில் நிதிஏற்பாடு ரூபா 434.9 மில்லியன் இல் ரூபா 304.5 மில்லியன் மட்டும் செலவிடப்பட்டிருந்தது. 2020 மார்ச் 10 ஆம் திகதிய பல்நோக்கு கட்டிடத்தின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த ஸ்டுடியோவில் காணப்பட்ட குறைகள் காரணமாக கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் ஸ்டுடியோ பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைக்கு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஸ்டுடியோவின் கட்டுமானத்திற்கு தொடர்புடைய குறைப்பாடுகள் அடையாளப்படுத்தி அக் கட்டிடத்தின் தொழிநுட்ப ஆலோசனை மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பொறியியல் பணிகள் தொடர்பாக மத்திய ஆலோசனை பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களினால் தற்போது தொடர்புடைய குறைப்பாடுகள் தயாரிக்கப்பட்டு வருகையில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுமென அறிவித்தேன். | ஸ்டுடியோவின் வேலைகள் விரைவாக நிறைவுச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைக்கு உள்ளடக்கப்படாத 02 ஆலோசகர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2019 மற்றும் 2020 வருடங்களில் ஒப்பந்த அடிப்படையில் இரு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்காக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ரூபா 6,944,804 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு வெற்றிடமாகிய விரிவுரையாளர் பதவிக்காக திறமையுடைய நபர்கள் இணைக்கப்படும் வரையில் சேவை ஒப்பந்த அடிப்படையில் இந்த ஆலோசகர்களின் சேவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | புதிய பதிகள் ஏற்படுத்துவதற்கு மற்றும் இணைத்தலுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்கள்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) பட்டநிலை பின் படிப்பு பட்டம் கற்பதற்காக ஊெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்றிருந்த உதவி அசிரியர் கல்வி விடுமுறை நிறைவடைந்து 2012 யூன் 30 ஆம் திகதியிலிருந்து கடமைக்கு அறிக்கையிடாமையின் காரணத்தினால் 2013 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து சேவையை விட்டு வெளியேறியதாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,553,825 ஆன பிணை பெறுமதி அறவிடப்படுவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை பெறுமதி அறவிடப்படுவதற்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. | பிணை பெறுமதி விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |